கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்,
முன்னிலை திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப.,

ந.க.எண். 18001/2019/இ2 நாள்:06.09.2019

பொருள்: நில மதிப்பு நிர்ணயம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் வட்டம்- கருமத்தம்பட்டி குரூப் கிராமம் சோமனூர் மஜரா- **க.ச.எண்: 07/2 உள்ளிட்ட 26 காலைகளில் 5449.474 ச.மீ** பரப்பில் புகளூர் முதல் அரகூர் வரை தி/வா. பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிட் நிறுவனத்தினர் அமைக்கவுள்ள 18 உயர்மின் அழுத்த கோபுரங்களுக்கான நிலத்திற்கு நில மதிப்பு நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை எண்: 281 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நில நிர்வாகப் பரிவு நாள்: 07.09.2017
2) அரசாணை எண்: 63 எரிசக்தி (அ1) துறை நாள்: 22.11.2017
3) நில நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை மற்றும் கடிதம் எண் : ஆ2/22464/2017 நாள்: 13.11.2017 மற்றும் 12.12.2017
4) அரசு தலைமைச் செயலர் கடித எண்:(Ms) No.41/a1,2018 நாள்: 16.5.2018
5) வருவாய் கோட்டாட்சியர், கோவை தெற்கு அவர்களின் முன் மொழிவுகள் ந.க. 3370/2019/அ2 நாள்: 26.08.2019

------

இந்திய மின்தொடர் கட்டுமான நிறுவனம் (Power Grid Corporation of India) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்பொழுது மின் கோபுரங்கள் நட்டு அந்த மின்கோபுரங்களில் மின் கம்பிகள் பொருத்தி அந்த கம்பிகளின் வழியே கொண்டு செல்ல வேண்டியுள்ளது என்றும், இந்த நோக்கத்திற்காக மின்கோபுரங்கள் பட்டா நிலங்களில் நடப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்பொழுதும் மின் கம்பிகள் பட்டா நிலங்களுக்கும் மேலே கொண்டு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்பொழுதும், மின் கோபுரங்கள் நடப்படவுள்ள பட்டா நிலங்களுக்கு 85% நில மதிப்பும், 110 kv மற்றும் அதற்குமேல் மின்கடத்தும் திறன் கொண்ட மின் கம்பிகள் பட்டா நிலங்களுக்கு மேலே அமைக்கப்படும்பொழுது அந்த மின் கம்பிகளுக்கும் கீழே உள்ள பட்டா நிலங்களுக்கு 15% நில மதிப்பும் இழப்பீடாக நில மதிப்பும், இழப்பீடாக நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் பார்வை 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. மின்கோபுரம் நிறுவப்பட வேண்டிய நிலங்களுக்கும், மின் கம்பிகளுக்கு (மின் பாதை)) அமையவுள்ள நிலங்களுக்கும் நிலமதிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரால் பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி (அதாவது நிலமதிப்பில் 2.75 மடங்கு) கணக்கிட வேண்டுமென்று தமிழ்நாடு எரிசக்தித் துறை அரசு செயலர்